## தலைப்பு 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ)உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதி சீராக்க கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ரூபா 6,917,629 ஆன கட்டுநிதி மீதியை சீராக்குவதற்கு தயாரிக்கப்பட்ட கட்டுநிதி சீராக்க கணகு சரியாக தயாரிக்கப்படவில்லை. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதி கணக்கொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும் | சுற்றறிக்கையின் 3 (1) ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் அறிக்கையில் இறுதி மீதிக்காக கட்டுநிதி சீராக்க கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்படும் அறிக்கையொன்றாக இல்லாதிருந்தமையால் அதனுடன் சமர்ப்பிக்கப்படவில்லை |

**1.6.2 நிதி செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவினப் பேரேட்டில் செலவு விடயங்கள் 03 இன் பொருட்டு ஒதுக்கீடு சேமிப்பு மற்றும் மீளாய்வு | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு | பின்னர் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் நிதிக்கூற்றில் ஏடிஏ- 2(ii) மாதிரியின் செலவினக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுக்கு இடையே ரூபா 1,309,072 ஆன வேறுபாடு காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | செலவினப் பேரேட்டின் பிரகாரம் செலவு விடயங்கள் 05 இன் பொருட்டு ஒதுக்கீடு சேமிப்பு மற்றும் மீளாய்வு ஆண்டின் நிதிக்கூற்றில் ஏடிஏ- 2(ii) மாதிரியின் செலவினக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுக்கு இடையே ரூபா 1,535,637 ஆன வேறுபாடு காணப்பட்டது. | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | பின்னர் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் இறுதி மீதி ரூபா 2,173,615,165 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 2,374,193,910 ஆக இருந்தமையால் அம்மீதிகளுக்கு இடையே ரூபா 6200,578,748 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணம் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் ஆரம்ப மீதி மற்றும் இறுதி மீதிகளுக்கு இடையே வேறுபாடு இருந்ததாகவும் |

### 1.6.4 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணைகள் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் | பிரமாணத்தின் பிரகாரம் தகவல்கள் உள்ளடக்கப்படும் விகையில் பிணை | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. | வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பதிவேடு பேணப்பட வேண்டும். | |
| **(ஆ)** | மின்சார உபகரணப் பதிவேடு<br>------------------------------------------------ | | |
| | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பிரமாணத்தின் பிரகாரம் அரசின் கட்டிடங்களில் உள்ள அனைத்து மின் உபபாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பொருட் பதிவேடொன்று பேணப்படவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | வாகனங்களைப் பதிவு செய்யும் பதிவேடு<br>------------------------------------------------------------ | | |
| | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகனங்களைப் நிரட்படுத்தும் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பிரமாணத்தின் பிரகாரம் வாகனங்களைப் நிரட்படுத்தும் பதிவேடு நாளது வரையாக பேணப்பட வேண்டும் | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |

### 1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தர் வழங்க வேண்டிய சான்றிதழ்

----------------------------------------------------------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்துப் பேணப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதனை ஆக்கபூர்வமாக வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |

வேண்டுமாயினும், அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | அவதானிப்புக்கள் | | |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| (அ) | இலங்கை சநனநாயக சோஷலிசக் குடிரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 104(4) | 2011 ஆம் ஆண்டில் இருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,484,684 ஆன வாகன சேதங்கள் மற்றும் இழப்புக்கள் சம்பவங்கள் 21 தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பரிசோதனை சபைக்கு மீண்டும் நினைவூட்டல் அனுப்பிவைக்கப்பட்டு விரைவாக பரிசோதனை அறிக்கையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2008 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 2008/01 ஆம் இலக்க திணைக்களப் பணிப்பாளரின் சுற்றறிக்கை | கால்நடைகள் இறப்பது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்காமை காரணமாக 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 8,536,078 பெறுமதியான கால்நடைகள் இறந்தமை தொடர்பாக சேதங்கள் மற்றும் நட்டங்களாக பதிவேடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உரிய பிரிவிற்கு எதிர்காலத்தில் அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காததன் பேரில் ரூபா 1,298,000,000 ஆன நிதிஏற்பாடுகளுக்கு மேலதிகமாக ரூபா 176,766,000 ஆன குறைநிரப்பு நிதிஏற்பாடு மற்றும் ரூபா 84,973,991 ஆன திணைக்கள வருமானத்தையும் ஆண்டின் செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | அனைத்துச் சொத்துக்களையும் தீர்வு செய்வதற்கு 2019 நிதி ஏற்பாட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்டதாகவும் வருமானத்தின் மூலம் கிடைக்கும் தொகை மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங் களுக்காக பயன்படுத்தப் பட்டுள்ளதாக |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 07 செலவின விடயங்களுக்குரிய ரூபா 109,500,000 ஆன தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 65,612,613 பயன்படுத்தப்படாமல் சேமிக்கப் பட்டிருந்ததுடன் அச்சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து 16 சதவீதம் 90 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | செலவின விடயங்களின் நிதிஏற்பாடு சேமிப்புக்களுக்கு காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக |
| (ஆ) 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 மற்றும் 2019 செப்தம்பர் 24 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் மூலதனச் செலவின விடயங்களில் 25 சதவீதம் சேமிக்கப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் 6 செலவின | மேற்படி | 2018 ஆம் ஆண்டில் காணப்பட்ட பொறுப்புக்களை தீர்வு செய்வதற்கு நேர்ந்த மையால் நிதிஏற்பாடுகளில் அதிகளவு அதற்காக செலவிட நேர்ந்ததாகவும். |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளில் ரூபா 61,995,110 அதாவது 0.84 சதவீதத்திலிருந்து 9.78 சதவீதம் வரையான அளவில் மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 02(iv) பந்தியின் பிரகாரம் எழுதுகருவிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் செலவின விடயத்தின் கீழ் வரும் செலவினங்களை இலுமானவரை குறைத்துக்கொள்ள வேண்டுமென குறிப்பிப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் வருடாந்த நிதிஏற்பாடான ரூபா 3,500,000 இற்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,000,000 மற்றும் நிதிப்பிரமாணம் 66 மாற்றல்கள் மூலமும் ரூபா 500,000 மாற்றப்பட்டு மொத்தம் 5,000,000 ஆன மொத்த தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 4,617,087 செலவிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | 2018 ஆம் ஆண்டில் காணப்பட்ட பட்டியல்களை 2019 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்வதற்கு நேர்தமையால் மேலதிக மேற்கொள்ள நேர்ந்ததாகவும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 செப்தம்பர் 06 ஆந் திகதிய 162 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் மாதிரியின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பட்டியலாக ரூபா 194,534,780 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக ரூபா 15,120,242 என குறிப்பிடப்பட்ட காரணத்தினால் | திரட்டிய பொறுப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 194,534,780 ஆக இருந்ததாக |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 179,414,538 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94(2) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக 04 செலவின விடயங் களுக்குரிய நிதி ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 1,458,258 பெறுமதியான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பாதீட்டு திணைக்களத்தின் வாய்மொழி மூல அறிவுறுத்தலானது அந்நிகழ்ச்சித்திட்டத்தில் காணப்படும் வேறு கருத்திட்டத்தின் நிதிஏற்பாடு சேமிப்பு அதற்கான காரணமாக இருந்தது. |
| (இ) | பொறியியல் அலகிற்கு கிடைக்கப் பெற்று இருந்த ஆயினும் சான்றுறுதிப் படுத்தப்படாத மொத்தம் ரூபா 3,669,130 இற்கான பற்றுச்சீட்டுக்களின் பெறுமதிக்கு கடப்பாடாக குறிப்பிடப்பட்டு இருக்க வில்லை. | அனைத்து கடப்பாடுகளும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | அப்பெறுமதி பொறுப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட வில்லையென |

### 1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திரட்டிய பரீட்சை மீதியில் முற்பணப் பெறுவனவு பெறுமதி ரூபா 30,271,855 ஆக இருந்த போதும் எஸ்ஏ-52 திறைசேரி அட்டவணையின் பிரகாரம் ரூபா 31,253,172 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 98,317 ஆன வேறுபாட்டிற்காக காரணங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. . | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சரியாக சீராக்கத் செய்யப்பட வேண்டும் | பெறுமதி திறைசேரி கணக்கின் பிரகாரம் இணங்குவதாகவும் |
| (ஆ) | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான திணைக்கள பதிவேடுகள் மற்றும் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புகளுக்கு இடையே 2015 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா 100,125 ஆன வேறுபாடு இனங்காணப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும | திறைசேரிக்கு நாட்குறிப்பு பத்திரமொன்று அனுப்பி வைக்கப்பட்டு சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக. |

**2.5 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு**

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்பணம் உரிய செயற்பாடுகளின் பொருட்டு பயன்படுத்தப்பட வேண்டி இருப்பினும் 05 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 122,250 இற்கான முழுமையான முற்பனம் அவ்வாறு பயன்படுத்தப்படாது 08 நாட்களுக்கும் 21 நாட்களுக்கும் இடையேயான காலத்தினுள் செயற்படுத்தப்படாது கையில் வைக்கப்பட்டு மீள தீர்க்கப்பட்டு இருந்தன. | திட்டமான / சரியான மதிப்பீடு தயாரிக்கபபட வேண்டும். | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுப்பதாக |
| (ஆ) | உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முற்பனத் தொகையை பெற்றுக் கொள்ளமை காரணமாக 29 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்டு இருந்த ரூபா 916,038 இற்கான முற்பணத் தொகையில் ரூபா 250,211 செலவு செய்யப்படாமல் பணத்தினால் தீர்க்கப்பட்டு இருந்தன. | மேற்படி | உரிய பிரிவுகளின் பணிப்பாளர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக |
| (இ) | நிதிப் பிரமாணம் 371(இ) இன் பிரகாரம் வழங்கப்படுகின்ற செயல்நிமித்த கட்டுநிதி ஒன்று வழங்கப்படுகின்ற நடவடிக்கை முற்றுப் பெற்ற உடனேயே தீர்க்கப்பட வேண்டி இருந்த போதிலும் 11 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்ட முற்பணங்கள் 05 நாள் முதல் 27 நாட்களுக்கு இடையே கையில் வைத்திருந்து தீர்க்கப்பட்டு இருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்வதாக. |

## 2.5 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைச்சேரி செயலாளரது 2015 ஜுன் 24 ஆம் திகதி ம் 243/2015 ஆம் இலக்க அரசாங்க கணக்கீட்டு சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு அமைய மற்றும் அரசியலமைப்பின் 149(1) ஆம் பிரிவிற்கு அமைய உரிய செயற்பாடுகளின் பொருட்டு சட்டத்தினால் ஒதுக்கீடு செய்யப்படாத சகல பெறுகைகளும் அரசின் ஒருங்கினைந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டி இருந்த போதிலும் AFFACI கருத்திட்டத்திற்கு உரிய 2016 ஆம் ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31 வரை ரூபா 3,698,111 நிதி தொகை திரட்டிய நிதிக்கு வரவு வைக்காது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு அந்த கணக்கில் இருந்து ரூபா 1,812,666 கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்ததுடன் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் மீதி ரூபா 1,885,445 ஆகும். | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அம்மீதிகள் இனங்காணப் பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக |
| (ஆ) | 02 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,147,798 பெறுமதியான 94 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பப்பட வேண்டும் | ரூபா 155,010 பெறுமதியான வைப்புக்கள் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் மூலதனச் செலவினத்திற்காக பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 724,000,000 தொகை மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதிஏற்பாடு ரூபா 164,000,000 என்ற அடிப்படையில் செயல்நடவடிக்கைத் திட்டம் ரூபா 888,000,000 இற்கு தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் இறுதியாக திருத்திய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ரூபா 824,000,000 இற்கு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 64,000,000 நிதிஏற்பாட்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தம் செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மொத்த மூலதனச் செலவினத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

### 3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கால்நடை கட்டுப்பாட்டாளர்களின் உற்பத்தி இயலளவை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 4,000,000 நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாடுகள் குறிப்பிட்டிருந்ததுடன் அச்செயற்பாடுகளை ஆண்டினுள் நிறைவேற்றாமல் கைவிடப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் செயற்படுத்த வேண்டும் | பதில் அளிக்கப்படவில்லை. |
| (ஆ) முன்னைய அண்டில் பூர்த்தி செய்ய வேண்டிய ரூபா 6,608,440 பெறுமதியான 02 ஒப்பந்தங்கள் தொடர்பாக 2019 திசெம்பர் 31 இல் | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் செயற்படுத்த வேண்டும் | பதில் அளிக்கப்படவில்லை. |

உள்ளவாறு செயன்முன்னேற்றம் 65 சதவீதமாக இருந்த போதும் 2020 யூலை மாதம் 23 ஆந் திகதி வரை அச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப் படாமல் கைவிடப்பட்டிருந்தது,

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கால்நடை விடய ஆய்வுகூடத்திற்கு தேவையான நிதிஏற்பாடு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பதவியணி வழங்கப்பட்டமை அடிப்படையில் - 400000 தடுப்பூசிகள் உற்பத்தி செய்வதற்கு இயலளவு காணப்பட்ட போதும் தேவையான வசதிகள் மற்றும் நிதிஏற்பாடுகள் கிடைக்காததான் பேரில் 04 ஆண்டு காலப்பகுதியில் 113,160 முதல் 248,730 வரையான வீச்சில் தடுப்பூசிகள் அளவில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. | நிறுவகத்தின் உயர் இயலளவு பயன்படுத்தப் பட வேண்டும். | வருடாந்த உயர் இயலளவிற்காக போதியளவு மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ள நிதிஏற்பாடு கிடைக்கவில்லை என |
| (ஆ) | இறக்குமதி செய்யப்படும் தரமான தடுப்பூசிகளுக்காக மாற்றீடாக உயர் தரமான தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 26,500,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மொத்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 26,137,417 அல்லது 99 சதவீதம் முன்னைய ஆண்டின் செலவின மீள் நிரப்பலுக்காக செலவிடப்பட்டிருந்தன. | நோக்கத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

## 3.4 எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தாடை மற்றும் வாய் நோய் தடுப்பூசிகள் உற்பத்திக்காக 2011 மார்ச் ரூபா 38,400,320 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட உயிரியல் சிகிச்சை உபகரண திருத்தங்களுக்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 4,331,120 செலவிடப்பட்டு உப பாகங்கள் | திருத்த வேலைகளை மேற்கொண்டு உபகரணத்தை பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை | பதில் அளிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கணக்காய்வு திகதி வரை அத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமையால் தடுப்பூசிகள் உற்பத்திக்காக உபகரணங்களை உயர் இயளலவில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டில் தேவைப்பாட்டின் 86 சதவீதத்தை இறக்குமதி செய்வதற்கு ரூபா 30,361,500 செலவிடப்பட்டிருந்தது. | எடுக்க வேண்டும். | |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போது உணவுப் பாதுகாப்பிற்காகவும் உணவிற்காகவும் வசதிகள் வழங்கும் பொருட்டு கால்நடைகளிலிருந்து பெறும் உணவுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்த ரூபா 70,000,000 நிதிஏற்பாட்டில் ஆண்டின் இறுதியில் ரூபா 69,242,057 அதாவது 99 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது, செயற்திட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் ஆய்வுகூடத்தை விரிவாக்கும் செயற்பாடுகள் தொடர்பாக உட்கட்டமைப்பு செயற்பாடுகளில் இடம்பெற்ற தாமதங்கள் சேமிப்பிற்கான காரணமாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் அவ்வாறான செயற்பாடொன்று இடம் பெற்ருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டிலும் அச்செயற்திட்டத்திற்கே ரூபா 50,000,000 ஆன நிதி ஏற்பாடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு ரூபா 39,000,000 தொகை நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் மாற்றப்பட்டு பின்னர் எஞ்சிய நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 3,200,777 அல்லது 29 சதவீதம் செயற்திட்டத்தின் நோக்கத்தினை நோக்கிச் செலவு செய்யாமல் பாதுகாப்பு சேவை, மின்சாரம் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை |

**3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 செப்தம்பர் மாதத்தின் போது கராஜ் ஒன்றை நிர்மாணிப்பதற்காக வெட் உடன் ரூா 1,742,788 தொகைக்கு 2018 திசெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்யும் இணக்கப்பாட்டின் பேரில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது நிர்மாணத்திற்காக ரூபா 2,888,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போது ரூபா 762,59 செலவிமொன்ற மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் நிர்மாணத்தை பூர்த்தி செய்யாமை காரணமாக நிதிஏற்பாடு ரூபா 2,125,941 ஆன நிதி ஏற்பாடு குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. மேலும் பெறுகை வழிகாட்டல் கோவையிலிருந்து விலகி கேள்வி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 05 உத்தியோகத்தர் களுடன் கூடிய குழுவொன்று மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்திற்குள் செயற்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். | வேலை பூர்த்தி செய்யப் படவில்லை எனவும் கேள்வி மதிபபீடு நடவடிக்கைகளை துரிதமாக நிறைவேற்றி நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பாக உள்ள தாமதத்தை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக |

**3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2020 மே 28 ஆந் திகதிய PED/RED/REG/02/CC/01 ஆம் இலக்க நிதி, பொருளதார கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சின் திறைசேரி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் 2020 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2020 செப்தம்பர் மாதம் வரையிலும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 யூன் 30 ஆந் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.6 பெறுகைகள்

-----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 வழிகாட்டலின் பிரகாரம் குறைந்தது மூன்று வருட காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை செயற்பாடுகள் விரிவாக உள்ளடக்கப்பட்டு பெறுகை நிறுவனத்தினால் பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை |
| (ஆ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2 வழிகாட்டலுக்கு முரணாக மீளாய்வாண்டின் மார்ச் மாதம் வரை சுத்திகரிப்பு சேவைக்காக அதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு ரூபா 1,104,694 உடன்படிக்கை யொன்று இல்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் ரூபா 574,560 ஆன வங்கியால் சமர்ப்பிக்கப்படாத செயலாற்றல் பிணைப்பொறுப்பு பெற்றுக்கொண்ட சுத்திகரிப்பு சேவைக்காக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு 2019 ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் வரை ரூபா 1,534,305 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் எஞ்சிய மாதங்களுக்காக முறையான பெறுகை செயற்பாட்டிலிருந்து விலகி சந்தை ஒப்பீட்டு விலையின் கீழ் சுத்திகரிப்பு சேவைக்காக ரூபா 917,205 தொகை மூன்று பிரிவுகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.10 வழிகாட்டலின் பிரகாரம் கேள்வி நுட்பமான முறையில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி ஆகக்குறைந்த விலையுடன் கூறுவிலை தீர்மானிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் கூறுவிலை கோரிய இரண்டு சந்தர்ப்பங்களில் ஒரே விவரக்குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிறுவனம் முதலாவது சந்தர்ப்பத்திலே நிராகரிக்கப்பட்டு இரண்டாவது சந்தர்ப்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆதலால் முதலாவது சந்தர்ப்பத்தில் ரூபா 32,706,900 தொகைக்கு கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்த உபகரணங்களுக்காக இரண்டாவது சந்தர்ப்பத்தின் போது ரூபா 33,700,000 தொகை கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்த காரணத்தினால் திணைக்களத்திற்கு ரூபா 993,094 நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டு சந்தர்ப்பங்களின் போது கேள்வி கோரப்பட்டதுடன் இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஒரே கேள்விதாரரால் குறைந்த விலையை சமர்ப்பிக்கப்பட்டமை மற்றும் விலை தளம்பல் அடிப்படையில் கிரயம் வேறுபட்டதெனவும் |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அ விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கட்டுநாயக்க கால்நடை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு 2008 நவம்பர் மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 2,461,290 பெறுமதியான இன்சிநேடர் (கழிவுப்பொருள் பழுதாக்கி) 2019 மார்ச் மாதம் முதல் செயற்பாடற்று காணப்படுவதால் 2002 சனவரி மாதம் வரையிலும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | புதுப்பித்தலுக்கு தேவையான உதிரிப்பாகங்களுக்காக மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக |

| | | | |
|---|---|---|---|
| (ii) | தெலஹர இனவிருத்தி நிலையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்காக ரூபா 3,161,310 செலவில் அரச வீடொன்று நிர்ராணிக்கப்பட்டிருந்த போதும் அவ்வீடு 2014 மே முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறைபாட்டை ஏற்றுக்கொள்வதாகவும் |
| (iii) | கால்நடை விசேட ஆய்வுகூடத்திற்குரிய 7 கால்நடை உபகரணங்கள் மற்றும் வாகனமொன்றும் 09 ஆண்டுகள் முதல் 19 ஆண்டுகள் வரை விளைவற்றுக் காணப்பட்டன. மேலு் தடுப்பூசி ஆய்வுகூடத்திற்குள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 07 இயந்திர உபகரணங்கள் மற்றும் 2000 லீற்றர் தாங்கிகள் 02 என்பன முன்னைய ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டன. | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கைதவிர்ப்பு செய்வதற்கும், திருத்த வேலைகளை செய்வதற்கும் பொருள் மெய்மையாய்வு சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் |
| (iv) | குண்டசாலை செயற்கை சிணைப்படுத்தல் நிலையத்திற்குச் சொந்தமாக 80 நைதரசன் கொள்கலன்கள் 1996 ஆம் ஆண்டு முதல் மளாய்வாண்டு வரை வெவ்வேறு நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கி இருந்ததுடன் அவ்வியந்திரங் களை 23 ஆண்டு காலமாக மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நீண்டகால அடிப்படையில் கடன் அடிப்படையில் பொருள் வழங்கல் மேற்கொள்ளப்படக் கூடாது. | தேசிய கால்நடை சபைக்கு அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதுடன் மாதாந்தம் அவை புதுப்பிக்கப்படுவதாகவும் |
| (v) | குண்டசாலை செயற்கை சிணைப்படுத்தல் நிலையத்தின் ஆய்வுகூட களஞ்சியத்தில் காணப்பட்ட காலாவதியான 30 ஆய்வுகூடப் பொருட்கள் மற்றும் மருந்து வகைகளை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 06 உபகரணங்கள் 2018 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | காலாவதியான பொருட்கள் தொடர்பாக பொருத்தமாக செயற்பட வேண்டும் | காலாவதியான பொருட்கள் 30 தொடர்பாக பதில் வழங்கப்படாதிருந்ததுடன் ஆறு மாத கடன் அடிப்படையில் அறவிடுவதாக |

| | | | |
|---|---|---|---|
| (vi) | 2018 திசெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட குண்டசாலை செயற்கை சிணைப்படுத்தல் நிலையத்தின் அலுவலகம் மற்றும் அரசின் வீடு என்பன 2020 பெப்ரவரி மாதம் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குண்டசாலை கால்நடை புலனாய்வு நிலையத்தின் சுற்றுலா விடுதியின் 09 சொத்து உருப்படிகள் விளைவற்றுக் காணப்பட்டன. | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கால்நடை புலனாய்வு நிலையம் தற்போது பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதுடன் சுற்றுலா விடுதி 2020 சனவரி மாதத்தின் போது 02 புலனாய்வு உத்தியோகத்தர் களுக்காக வழங்கப்பட்டுள்ள தாகவும் |
| (vii) | குண்டசாலை பிரதேச செயலாளருக்கு உரிய கால்நடை விசேட ஆய்வுகூடத்தை பயன்பாட்டிற்கு எடுக்கும் 01 ஏக்கர் 01 ரூட் அளவு கணக்காய்வு திகதி வரையிலும் முறையாக கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையாக கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முறையாக கையேற்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் |

**(ஆ) வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் திறைசேரி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலைமையில் காணப்படுத் மோட்டார் வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 08 வாகனங்கள் தொடர்பாக பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | விசேட கணிப்பீட்டு சபையொன்று நியமிக்கப்பட வேண்டும். |

## 3.8 அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளவாறான பதவியணியினர் 766 ஆக இருந்ததுடன் அப்பதவியணியிலிருந்து நிதிப் பிரமாணம் 892 இன் பிரகாரம் பிணை வைப்பதற்கு உத்தியோகத்தர்கள் தொடர்பான பட்டியல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |
| (ஆ) | கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி செயலாளரின் 2012 சனவரி 06 ஆந் திகதிய எம்எல்ஆர்டீடீ/04/01/49 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பிணை வைக்க பதவிகளுக்குரிய பரிந்துரைக்கப்பட்ட பிணை தொகை குறிப்பிப்பட்டிருந்த போதும் 315 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,759,000 தொகையொன்று அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

## 3.7 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 கால்நடைகள் இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர் இறந்திருந்ததுடன் இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகள் தொடர்பாக காப்புறுதி செய்யப்படாமை காரணமாக ரூபா 4,863,772 ஆன நட்டமொன்று மீள்நிரப்புவதற்கு | பொருத்தமான காப்புறுதி நிறுவனமொன்று மூலம் காப்புறுதி செய்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காப்புறுதி செலவு நலன்களுடன் பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமாக இல்லாமையால் காப்புறுதி செய்யப்படவில்லையென. |

| | | |
|---|---|---|
| | இருந்த சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்தது. | |
| (ஆ) | திணைக்களத்தின் 11 உத்தியோகதத்ர்களுக்கு வெளிநாட்டு கல்வி விடுமுறை பெற்றுக்கொண்டு பிணை பொறுப்பு கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் கட்டாய சேவைக்காலத்தை பூர்த்தி செய்யப்படாமை காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 31,431,060 ஆன பிணை பொறுப்புக்களின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை பொறுப்புக்களின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பதில் அளிக்கப்படவில்லை. |

**3.10 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கால்நடை புலனாய்வு நிலையமொன்றில் நிறுவப்பட்டுள்ள கால்நடை உணவு பகுப்பாய்வு நடவடிக்கை மேற்கொள்ள முடியுமான போதும் 2014 யூலை மாதம் முதல் பகுப்பாய்வு செயற்பாடுகள் நிறுத்தப் பட்டிருந்தன. கால்நடை உணவு பகுப்பாய்வு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட உபகரணங்கள் விளைவற்ற வகையில் வைக்கப்பட்டிருந்ததுடன் அப்பகுப்பாய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | ஆய்வுகூம் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டு பகுப்பாய்வு நடவடிக்கை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உபகரண திருத்தங்களுக்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக |

4. நிலைபேறான அபிவிருத்தி

4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக அறிந்திருக்காமையால் அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி அடைந்து கொள்வதனை மதிப்பிடுவதற்காக அளவுகோல்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அளவுகோல்களையும் நோக்கங்களையும் இனங்காண்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை |

5. நல்லாளுகை

**பிரஜை / சேவை பெறுனர்களின் விஞ்ஞாபனம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2018 சனவரி 24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரஜை/சேவை நாடுனர் விஞ்ஞாபனத்திற்கு இணங்க நிறுவனத்தினால் பிரஜை / சேவை நாடுனர் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததாக. |

## 6 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டுநாயக்க கால்நடை தனிமைப்படுத்தல் நிலையத்தின் அங்கீகரிக்கப்படாத கால்நடை கட்டுப்பாட்டு உதவியாளர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு 2019 ஆம் ஆண்டின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 402,363 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மிகை ஏற்படாத வகையில் ஊழியர்கள் முகாமைப்படுத்தல் வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |
| (ஆ) | கால்நடை தனிமைப் படுத்தல் நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக இருந்த 06 பதவிகளில் 08 பேருக்காக 2019 ஆம் ஆண்டின் போது மாத்திரம் திட்டவட்டமான கடமைகள் இல்லாமல் 3,797,817 சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதவியணியினர் சரியாக முகாமைத்துவ செய்யப்பட வேண்டும். | இப் பதவியணியினர் கடமை தேவைப்பாட்டு அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் அவர்களுக்கு விளைவற்ற வகையில் சம்பளம் கொடுக்கப்பட வில்லையென |
| (இ) | திணைக்களத்தின் கால்நடை வைத்தியரின் 19 வருட சேவைக் காலத்தில் 04 சந்தர்ப்பங்களில் 16 வருடங்கள் ஏனைய இடங்களுக்கு சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அக் காலப்பகுதியில் உத்தியோகத்தருக்கு திணைக்களத்தினாதல் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளம் மற்றும் படிகளை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதும் சம்பளம் மீள்நிரப்பப்பட வேண்டும். | சம்பளம் மீள்நிரப்பப்பட வில்லையனவும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 951 ஆக இருந்ததுடன் மிகை மற்றும் வெற்றிடங்கள் சீராக்கப்பட்டதன் பின்னர் மொத்த வெற்றிடங்கள் 185 ஆகவும் இரண்டு பதவிகளுக்குரிய மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 10 ஆக காணப்பட்டன. | சரியாக ஊழியர்களை முகாமை செய்ய வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |
| (உ) | 2018 திசெம்பர் 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சேவை புரியும் ஒவ்வொரு மட்டத்திற்கும் உரிய ஊழியரினதும் இயலளவை மேம்படுத்துவதற்கான செயலாற்றல் மதிப்பீட்டுப் பத்திரத்தைப் பயன்படுத்துதல் செயலாற்றல் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல் மனிதவள அதிகரிப்பை திட்டமொன்று தயாரித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டிய போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |